செ.வெ.எண்:73 நாள்:27.04.2018

## பழக்கடை மற்றும் குளிர்பான கடைகள் நடத்துபவர்கள் சுத்தம் மற்றும் சுகாதாரம் பேணிக்காக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் அறிவிப்பு

கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், தற்பொழுது கோடை காலம் ஆரம்பமாக உள்ளதால் பொதுமக்கள் அனைவரும் குளிர்பானங்கள், பழ வகைகள் அதிகம் பயன்படுத்துவார்கள். எனவே, பொதுமக்களுக்கு விற்பனை செய்யும் சாலையோர பழச்சாறு கடைகள் மற்றும் குளிர்பானக் கடைகள் நடத்துபவர்கள் சுத்தம் சுகாதாரத்தை பின்பற்ற வேண்டும் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், கோடை காலம் ஆரம்பிக்க உள்ள நிலையில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக வாங்கும் குளிர்பானங்கள், தண்ணீர்பாட்டில்கள் போன்றவற்றை காலாவதிதேதி பார்த்து வாங்கி பயன்படுத்த கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார். ஆதலால், பேக்கரி, டீக்கடைகள், குளிர்பான நிலையங்கள் மற்றும் பழஜூஸ் கடைகளை நடத்தி வருபவர்கள் பொதுமக்களுக்கு தரமான, காலாவதி ஆகாத, பயன்படுத்த உகந்த உணவுப் பொருட்களை உணவு தயாரித்து விற்பனை செய்ய வேண்டும். தவறும் பட்சத்தில் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் எச்சரித்துள்ளார். இதுசம்மந்தமாக, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கரூர் மாவட்ட உணவுப் பாதுகாப்பு துறை போதிய நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டுள்ளார். பொதுமக்களுக்கு தரமான மற்றும் பயன்பாட்டிற்கு உகந்த குளிர்பானங்கள், தண்ணீர் பாட்டில்கள் கிடைப்பதற்கு ஏதுவாக கரூர் மாவட்ட உணவுப் பாதுகாப்பு துறையினர் மாவட்டத்தில் உள்ள அனைத்து பேக்கரி, டீக்கடைகள், குளிர்பான நிலையங்கள் மற்றும் பழஜூஸ் கடைகளை ஆய்வு மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளார்.

மேலும், குளிர்பானங்களுக்கு பயன்படுத்தும் ஐஸ் வகைகள் சுத்தமானது மற்றும் தரமானதாகவும், பொதுமக்கள் குடிப்பதற்கு உகந்த தண்ணீர் கொண்டும் தயாரிக்க வேண்டும். பேக்கரி, டீக்கடைகள், குளிர்பான நிலையங்கள் மற்றும் பழஜூஸ் கடைகள் நடத்துபவர்கள் அனைவரும் உணவுப் பாதுகாப்பு உரிமம் / பதிவு கட்டாயம் பெற்று, தங்களது கடையில் வைத்திருத்தல் வேண்டும். மேலும், உணவுப் பாதுகாப்பு துறை அலுவலர்கள் ஆய்வின்போது உரிமம் / பதிவு தொடர்பான ஆவணங்கள் ஆய்வு செய்யப்படும். தவறுபவர்கள் மீது உணவுப் பாதுகாப்பு தர நிர்ணயச் சட்டம் 2006–ன்கீழ் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்துள்ளார்.

பொதுமக்கள் சந்தேகப்படும்படியான குளிர்பானங்கள் விற்பனை செய்பவர்களைக் கண்டறிந்தால் உடனே, உணவுப் பாதுகாப்பு துறையின் வாட்ஸ்அப் புகார் எண் 94440 42322 என்ற இந்த எண்ணிற்கு புகார் தெரிவிக்க பயன்படுத்திக்கொள்ளுமாறும், தவறு செய்பவர்கள்மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க ஆவண செய்யுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.